# வசதி வேண்டுமா?



TB.
031 (A.E)
N56
135873.

வித்துறை வெளியீடு.

614
1-5

# வசதி வேண்டுமா?

[முதியோர் கல்வி — சுவடி 19.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAR 1951
MADRAS

கா. சரோஜினி

சென்னை கல்வித்துறை வெளியீடு.

முதல் பதிப்பு—செப்டம்பர், 1956.

135823

TB
031(AE)
N56

கபீர் அச்சுக்கூடம், சென்னை. (3429)

# முன்னுரை

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப் போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப் பயன் பெறவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6–9–1956.

நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

# இதில் உள்ளவை.

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மருதப்பன் | ... | 1 |
| 2. | ஏற்றம் எதற்கு? | ... | 3 |
| 3. | மின்சார விளக்கு | ... | 5 |
| 4. | மின்சார இஸ்திரிப் பெட்டி | ... | 8 |
| 5. | மின்சார விசிறி | ... | 11 |
| 6. | மின்சார அடுப்பு | ... | 12 |
| 7. | மின்சாரக் குளிர்ப் பெட்டி | ... | 15 |
| 8. | மின்சார ஆட்டுக் கல் | ... | 18 |
| 9. | மின்சாரத் தேங்காய்த் திருகி | ... | 19 |
| 10. | பட்டிக்காட்டு வாழ்க்கைக்கு இவை அவசியமா? | ... | 22 |
| 11. | டெலிபோன் | ... | 26 |
| 12. | ரேடியோ | ... | 30 |

3429—3

# வசதி வேண்டுமா?

## 1. மருதப்பன்.


மருதப்பன் ஒரு குடியானவன். அவன் ஊர் பாலூர். பாலூர் ஒரு கிராமம். குமுதா மருதப்பனின் மனைவி. ஒரு நாள் பகல் மூன்று மணி. குமுதா கூடத்தில் உட்கார்ந்து இருந்தாள். அவள் மகள் மல்லிகா. பதினைந்து வயது மல்லிகா தலை சீவிக்கொண்டு இருந்தாள். மருதப்பன் களைப்புடன் உள்ளே வந்தான். வந்தவன் கூடத்தில் ஊஞ்சலில்

'உஸ், அப்பாடா,' என்று உட்கார்ந்தான்.

மருதப்பன்: (வந்த களைப்பில்) குமுதா, கொஞ்சம் தண்ணீர் கொடு. சாப்பிட என்ன இருக்கிறது?

குமுதா: அடை சூடாக இருக்கிறது. சாப்பிடுங்கள். நீங்கள் போன காரியம் காயா? பழமா?

மருதப்பன்: எல்லாம் முடிந்த மாதிரிதான். சீக்கிரம் நமக்குப் பணம் வரும். நாமும் ஒரு கிணறு வெட்டலாம்.



ஒரு மிஷின் வாங்கிப் போட்டால் போதும்.

## 2. ஏற்றம் எதற்கு?

குமுதா: கிணறு வெட்டி ஏற்றம் போட்டால் நமக்கு ஒரு பெரிய மனக் கவலை தீரும்.

மருதப்பன்: ஏற்றம் எதற்கு? இப்போது நம் ஊருக்கு

மின்சாரம் வருகிறதே! ஒரு மிஷின் வாங்கிப் போட்டால் போதும்.

குமுதா: மிஷின் வாங்கப் பணம் அதிகம் செலவாகுமா?

மருதப்பன்: செலவைப் பார்த்தால் முடியுமா? முதல் வைத்தால் அல்லவோ இலாபம் கிடைக்கும்? மிஷின் ஓடினுல் தினம் வயலுக்குத் தண்ணீர் பாயும். தண்ணீர் தொல்லை இருக்காது. நல்ல விளைச்சலும் உண்டாகும். நல்ல விளைச்சல் இருந்தால் நமக்குப் பணமும் அதிகம் கிடைக்கும். நம்மிடம் பணம் இருந்தால் சீக்கிரம் மல்லிகாவுக்கு மணம் செய்யலாம். எது எப்படி

இருந்தாலும் சரி. மல்லிகாவுக்கு அடுத்த வருடம் திருமணம் செய்து ஆகவேண்டும்.

மல்லிகா: அப்பாவுக்கு எப்பொழுதும் இதே பேச்சுதான்.

குமுதா: நம் ஊருக்கு மின்சார வசதி வரப்போகிறது அல்லவா? அதைப் பற்றிச் சொல்லுங்கள்.


## 3. மின்சார விளக்கு.

மருதப்பன்: மனு போட்டு மின்சாரத்தை நம் ஊருக்குள் கொண்டு வருவோம்.

கிராமத்தில் மின்சார விளக்குகள் போடலாம். நம் வீதிகளில் மின்சார விளக்கு போட்டால் எப்படி இருக்கும் தெரியுமா ?

குமுதா: அப்படி என்றல் நம் வீட்டிற்கும் விளக்கு போடலாம் அல்லவா?

மருதப்பன்: ஆமாம். வீட்டிற்கும் விளக்கு போடலாம். நம் வீட்டிற்கும் மின்சார விளக்கு வந்துவிடும். அப்போது நீ இருட்டில் தடுமாற வேண்டாம். 'டக்' என்று போட்டால் 'பளிச்' என்று எரியும்.



'டக்' என்று போட்டால் 'பளிச்' என்று எரியும்.

குமுதா: எனக்கு என்ன தெரியும்? இன்னும் என்னென்ன அதிசயமெல்லாம் வரப் போகிறதோ?

மருதப்பன்: அவைகள் இப்பொழுது உனக்கு எப்படிப் புரியும்?

3429—6



நீங்கள்கூட துணிக்குப் பெட்டி போடுவீர்கள்.

# 4. மின்சார இஸ்திரிப் பெட்டி.

மல்லிகா: மின்சாரம் இருந்தால் எவ்வளவோ காரியங்கள் செய்யலாம்.

குமுதா: மல்லிகா, நீ பட்டணத்தில் படித்த பெண். இன்னும் என்னென்ன செய்யலாம்? சொல். கேட்கலாம்.

மல்லிகா: மழை நாட்களில் வண்ணான் வரவில்லையே என்ற கவலை வேண்டாம்.

மருதப்பன்: அது எப்படி?

மல்லிகா: துணிகளைத் துவைத்துப் பெட்டி போட்டு மடித்து அடுக்கலாம்.

குமுதா: துணிகளுக்கு எப்படி பெட்டி போடுவது?

மல்லிகா: கரி இல்லாமல் மின்சாரம் உபயோகித்து 'இஸ்திரி' போடலாம்.

குமுதா: அப்படியும் இருக்கிறதா?


மல்லிகா: ஆம், அம்மா, மின்சார 'இஸ்திரிப்' பெட்டி சாதாரண இஸ்திரிப் பெட்டி மாதிரி இருக்கும். சிறியதாகவும் இலேசாகவும் இருக்கும். அம்மா! நம் வீட்டில் மின்சார இஸ்திரிப் பெட்டி இருந்தால் நீங்கள் கூடத் துணிக்குப் பெட்டி போடுவீர்கள். அத்துடன் கம்பி சேர்ந்து இருக்கும். அந்தக் கம்பியின் வழியாக மின்சாரம் செல்லும். இஸ்திரிப் பெட்டியில் மின்சாரம் செல்ல, சிறிது நேரத்தில் பெட்டி சூடு ஏறும். அப்பொழுது துணியின் மீது பெட்டியை வைத்துத் தேய்க்க வேண்டும்.

குமுதா: மின்சாரம் இருந்தால் இப்படியும் செய்யலாமா? நல்லதாயிற்று.

## 5. மின்சார விசிறி.

மருதப்பன்: இன்னும் ஏதாவது முடியுமா அம்மா?

மல்லிகா: மின்சாரத்தால் பல நன்மைகள் உண்டு அப்பா. மின்சார விசிறி உண்டு. வெயில் நாளில் பனை ஓலை விசிறியால் விசிறி விசிறி கை ஓய்ந்து போகிறதே! மின்சார விசிறியை முடுக்கி விட்டால் தானாகவே நாள் முழுதும் விசிறிக் கொண்டே இருக்கும், அப்பா.




தானகவே நாள் முழுதும் விசிறிக்கொண்டே இருக்கும்.

மருதப்பன் : நம் கூடத்தில் அம்மாதிரி ஒரு விசிறி போட வேண்டும். கூடம் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும்.

## 6. மின்சார அடுப்பு.

குமுதம் : கூடம் குளிர்ந்தால் போதுமா ? அடுப்பண்டைப் புகையில் என் கண் போகிறதே ! இதற்கு



பெண்கள் அடுப்பு ஊதாமல் சுகமாக வாழலாம்.

மின்சாரம் ஒன்றும் செய்யாதா?

மல்லிகா: ஆம், அம்மா! அதைத்தான் சொல்ல வந்தேன். மின்சார அடுப்பு இருக்கிறது. அதில் புகையே வராது. மின்சார அடுப்பில் சிறிய அடுப்பும் உண்டு; பெரிய அடுப்பும் உண்டு.

சிறிய அடுப்பில் அவசரத்திற்குப் பால் காய்ச்சலாம்; குடிக்க வெந்நீர் போடலாம்; தோசை சுடலாம். பெரிய அடுப்பில் ஒரு குடும்பத்திற்கே சமையல் செய்யலாம்; சீக்கிரம் செய்யலாம். மின்சார அடுப்பால் கண்ணுக்குக் கெடுதல் இல்லை; வேலையும் சீக்கிரம் முடியும்; மழை காலத்தில் ஈரவிறகுத் தொல்லை ஒழியும். கிராமங்களிலும் மின்சார அடுப்பே வந்துவிட்டால் நம் நாட்டில் மரங்களும் காடுகளும் செழிப்பாக வளரும். பெண்கள் அடுப்பு ஊதாமல் சுகமாக வாழலாம்.


மருதப்பன்: நம் வீட்டிற்கு மின்சாரம் வந்தவுடன் பார்! முதலில் மின்சார அடுப்பை வாங்கிவருகிறேன்! மின்சாரம் வந்தால் விறகை வைத்து ஏன் ஊத வேண்டும்? உன் அம்மாவுக்கு வேலை குறையும்.

135873

## 7. மின்சாரக் குளிர்ப் பெட்டி.

மல்லிகா: இன்னும் ஒன்றுகூட வீட்டில் இருக்க வேண்டும் அப்பா. அதுதான் 'மின்சாரக் குளிர்ப் பெட்டி.' பட்டணத்தில் இருந்து வாங்கி வரும் காய்கறிகளை அதில் வைக்கலாம்.


TB
031(AE)
N56



மின்சாரக் குளிர்ப் பெட்டி.

குளிர்ப் பெட்டியில் வைத்த காய்கறிகள் பல நாள் ஆனாலும் புதிதாகவே இருக்கும். துவைத்த தயிறு புளிக்காமல் இருக்கும். பதநீரையோ கருப்பஞ் சாற்றையோ அதில் சிறிது நேரம் வைத்துக் குடித்தால் குளிர்ச்சியாக இருக்கும். எந்த பானத்தையும் அதில்

வைத்து, எடுத்துக் குடித்தால் குளிர்ச்சியாக இருக்கும். அதில் வைத்த தயிர் சாதம் இரண்டு நாள் ஆனாலும் புளிக்காது. குளிர்ப்பெட்டியில் வைத்த மோர் வெயில் காலத்தில் குடிக்கக் குடிக்க ஆனந்தமாக இருக்கும். அதன் உள்ளே வைத்த பழங்கள் பல நாட்கள் ஆனாலும் சற்றும் கெடாமல் இருக்கும். கேழ்வரகுக் கூழ் அல்லது கம்பு கூழ் அதில் வைத்துக் குடித்தால் நன்றாக இருக்கும் அப்பா.



தானகவே அரைக்கும்.

# 8. மின்சார ஆட்டுக் கல்.

குமுதா: மின்சாரம் சமையல் வேலைக்கு இன்னும் என்னென்ன விதங்களில் உதவும்? சொல்லு, மல்லிகா.


மல்லிகா: மின்சார ஆட்டுக் கல் போடலாம் அம்மா. அதில் இட்லிக்கோ, வடைக்கோ மாவுஅரைக்கலாம். தானகவே அரைக்கும். வேகமாகவும்

அரைத்துக் கொடுக்கும். சென்னையில் சில உணவு விடுதிகளில் இதை இப்போதும் பார்க்கலாம்.

குமுதா: இந்த விநோதத்தை நான் பார்த்ததே இல்லை மல்லிகா!

## 9. மின்சாரத் தேங்காய்த் திருகி.

மல்லிகா: அது மாத்திரமல்ல, அம்மா. மின்சாரத் தேங்காய்த் திருகியும் உண்டு. தேங்காய் முடிகளை அது சுத்தமாகத் திருகும்; மிக வேகமாகவும் திருகும். எத்தனைத் தேங்காய் முடிகளையும் திருகும்.



மின்சாரத் தேங்காய்த் திருகி.

குமுதா: அடடா! நம் வீட்டிலே மின்சார ஆட்டுக் கல்லும் மின்சார தேங்காய்த் திருகியும் இருக்க வேண்டும். அவை இருந்தால் எனக்கு எவ்வளவோ உழைப்பு குறையும். எவ்வளவு நேரம் மீதியாகும்!

மருதப்பன்: உன் நேரத்தை மீதியாக்கி என்னதான் செய்திடுவாய்?

மல்லிகா: நன்றாய்க் கேட்டீர்கள் அப்பா! படிக்க நேரமில்லை என்கிற பல்லவியை அப்போது பாட முடியாது. சரிதானா, அப்பா?

மருதப்பன்: குமுதா படித்து கலைவாணி ஆவதாயிருந்தால் இத்தனையும் வாங்கிப் போடுகிறேன்.

குமுதா: இப்போது வீடுவீடாகப் புத்தகம் தருகிறார்கள். எனக்கு ஓய்வு நேரம் கிடைத்தால் எத்தனையோ நல்ல புத்தகங்களைப் படித்து முடிப்பேன்.

# 10. பட்டிக்காட்டு வாழ்க்கைக்கு இவை அவசியமா?

மருதப்பன்: அடடா! என்ன அற்புதம்! மல்லிகா, நீ படித்த பெண். புத்திசாலி. நீ சொல்லுவதெல்லாம் எனக்குப் பிடித்து இருக்கிறது. ஆனாலும், மல்லிகா, பட்டிக்காட்டு வாழ்க்கைக்கு இவை அவசியமா?

மல்லிகா: நன்றாகச் சொன்னீர்கள்! அப்பா. இது நல்ல கேள்வி. பலரும் இப்படியே இன்னும் நினைக்கிறார்கள். சுக வாழ்க்கைக்கு ஆன வசதிகள்

பல உண்டு. அவை எல்லாம் பட்டணத்திற்கே என்று முடிவு கட்டுவது கூடாது. பட்டிக்காட்டில் வசிப்பவருக்கு அவை எதற்கு என்று சிலர் சொல்லலாம். சுயநலத்தால் சொல்லலாம். நாமும் அதையே சொல்லுவது சரியல்ல, அப்பா. மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வசிப்பவரே. சுக வாழ்வு கிராமத்தில் இருப்போர்க்கும் பிறப்பு உரிமை ஆகும். இந்த உரிமையை நம் குடியரசு ஆதரிக்கிறது. இந்த உரிமையை நடைமுறையில் கொண்டுவர நம் நாட்டுத்

தலைவர்கள் பாடுபடுகிறார்கள். கிராமங்களைப் பிடித்த தரித்திரத்தை ஐந்தாண்டுத் திட்டங்களால் ஒழிக்க அரும் பாடு படுகிறார்கள். மின்சாரம் சுக வாழ்வுக்கு ஆனது என்றால் அது முதலில் கிராமங்களுக்கே வர வேண்டும். கிராமத்தினர் வாங்கக் கூடிய விலைக்கு இவையெல்லாம் வரும்.

மருதப்பன்: மல்லிகா! நீ சொல்லுவதெல்லாம் கேட்பதற்கு இனிமையாய் இருக்கிறது. நீ சொல்லுகிற மாதிரி இவையெல்லாம் கிராமங்களுக்கு வர எவ்வளவு மின்சாரம் வேண்டும்! அது சாத்தியமா?

மல்லிகா : சாத்தியம்தான் அப்பா. அணு சக்தியால் எளிதில் சாத்தியமாகும். மனிதன் மனது சரியாய் இருந்தால் அணு சக்தியை அடக்கி நன்மை அடையலாம். அணு சக்தியை அடக்கி மின்சாரம் உற்பத்தி செய்யலாம். அப்படிச் செய்தால் மின்சாரத்தை எங்கும் அளவு இல்லாமல் சும்மா வழங்கலாம்.



ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு டெலிபோன் வரலாம்.

# 11. டெலிபோன்.

மருதப்பன்: அப்படி அந்த அளவிற்கு மின்சாரம் கிடைக்கும் நாளிலே என்னதான் முடியாது!

மல்லிகா: அந்த நாளிலே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு டெலிபோன் வரலாம், அப்பா. ஒவ்வொரு

குடிசைக்கும் ஒரு டெலிபோன் வரலாம்.

குமுதா: டெலிபோன் என்கிறாயே. அது என்ன? சொல்லு, மல்லிகா.

மல்லிகா: மின்சாரம் உள்ள இடங்களிலே டெலிபோன் அமைக்கலாம், அம்மா. டெலிபோன் மூலம் தொலைவில் உள்ளவரிடம் பேசலாம். நாம் இருவரும் இப்போது பேசுகிற மாதிரியே சுலபமாகப் பேசலாம். நம் வீட்டில் டெலிபோன் இருப்பதாக வைத்துக்கொள்வோம். பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டிலும் டெலிபோன் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நம் வீட்டில்

இருந்து அந்த வீட்டிற்கு டெலிபோன் மூலம் பேசலாம். பட்டணத்தில் இன்று இது சாதாரணம்.

குமுதா: என்ன அதிசயம்! வெயிலில் போகாமல் வீட்டில் இருந்தபடியே அடுத்த வீதி வீட்டில் உள்ளவரிடம் பேச முடியுமா?

மல்லிகா: முடியும், அம்மா. பட்டணத்தில் நான் பலமுறை டெலிபோனில் பேசி இருக்கிறேன். வீட்டில் இருந்தபடியே பல மைல் தொலைவிலுள்ள கடையில் விலை விசாரிக்கலாம். டெலிபோன் மூலம் விலை தெரிந்துகொண்டு பிறகு போய், பல சாமான்களை

வாங்கலாம். டெலிபோன் இருந்தால் நமக்கு அலைந்து திரிவது குறையும்.

குமுதா: என்ன அற்புதம்!

மல்லிகா: கிராமத்திற்கு இன்று இது அற்புதம்தான், அம்மா. நமக்கு டெலிபோன் இருந்தால் இங்கிருந்து பட்டணத்திற்குப் பேசலாம்; டில்லிக்கும் பேசலாம். அதனால் எவ்வளவோ நேரம் மீதி ஆகும்.

மருதப்பன்: கிராமத்திற்குக் கிராமம் டெலிபோன் இருந்தால் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மையாய் இருக்கும்.

மல்லிகா: கிராமத்திற்கு ஒரு பொது டெலிபோன்


இருந்தால் யாரும் அதில் பேசலாம். நீங்கள் நினைத்த படியே டெலிபோன் வரும், அப்பா.

மருதப்பன்: மல்லிகா! நீ சொல்லுவதெல்லாம் சரி. மணி என்ன பார்.

## 12. ரேடியோ.

மல்லிகா: மணி ஐந்து ஆகிறது அப்பா.

மருதப்பன்: அடாடா! மறந்து விட்டேனே! நம் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரைப் போய்ப் பார்க்க வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தார் ஊருக்கு ஒரு ரேடியோ கொடுக்கிறார்கள். மின்சாரம் வருவதற்குள் நம் ஊருக்கும்



நமக்கு ஒரு நல்ல பொழுது போக்கு.

ஒரு ரேடியோ வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குமுதா: ஊரில் ரேடியோ வாங்கினுல் நமக்கு என்ன ?

மல்லிகா: ரேடியோ கிராமபோன்

மாதிரி இருக்கும், அம்மா. மின்சாரம் இருந்தால் ரேடியோவில் பாட்டுகள் கேட்கலாம். உலகச் செய்திகள் அறியலாம். நாட்டு விலைவாசிகள் தெரியும். உலகப் பெரியார்கள் பேசுவதை இங்கிருந்தே கேட்கலாம். நாடகமும் கேட்க முடியும். அது நமக்கு ஒரு நல்ல பொழுது போக்கு அல்லவா? வீட்டிற்கு ஒரு ரேடியோ ஒரு நாளைக்கு வரும், அம்மா.

குமுதா: ஏது! நம் ஊரோ பட்டிக்காடு. இனிமேல் பட்டிக்காடு பட்டணமாக ஆகிவிடும்! மின்சாரத்தால் எவ்வளவு அதிசயங்கள்

78 (AE) 031 N56

எல்லாம் உண்டாகின்றன. நம் வீட்டிலும் மின்சார விளக்குகள் போட்டால் அரண்மனை மாதிரி அல்லவா இருக்கும்.

மருதப்பன்: சரி. நான் வெளியே போய் வருகிறேன்.

குமுதா: போய் வாருங்கள். போகும் இடத்தில் பேச உட்கார்ந்தால் உங்களுக்குப் பொழுது போவதே தெரியாது. ஆக்கிய சோறு ஆறிப்போயிடும். பொழுதோடு வீடு வந்து சேருங்கள்.

மருதப்பன்: நான் சீக்கிரமே திரும்பி வருகிறேன்.

[போகிருர்]

# சென்னை கல்வித்துறை
# முதியோர் கல்வி வெளியீடுகள்

*

## மடல்கள்—விலை ஒரு அணா

1. ஆணியும் நிமிஷமும்
2. கேள்வி பதில்
3. இவை ஆகாது
4. நாட்டின் பெருமை
5. கண்டு கற்போம்

## சுவடிகள்—விலை இரண்டு அணா

1. பார்வதிக்கு ஒரே பிள்ளை
2. பெண்ணா ? போரா ?
3. நல்ல தீர்ப்பு
4. வரப்புத் தகராறு
5. ஊதாரி ராமனும் உழைப்பாளி கந்தனும்
6. சுவேதன்
7. சேவல் சண்டை
8. மந்திரம் இல்லை ! மாயம் இல்லை !!
9. ஐயோ ! தீ !
10. சேவலை நொண்டுகிறது
11. வள்ளுவர் பேசுகிறார்
12. ஒரு இனிப்பான செய்தி
13. புத்தர் வரலாறு
14. வண்ணானும் வண்ணாத்தியும்
15. வண்டி வளர்ந்த கதை
16. எப்படிப் பிறந்தது ?
17. எப்படிச் செய்தனர் ?
18. மணி என்ன ?
19. வசதி வேண்டுமா ?
20. பணம் சேர்த்தீரா ?
21. முத்தையனுக்கு வழி பிறந்தது
22. வாழும் வழி
23. ராணி மாளிகை
24. பாம்பு கடித்தால்......
25. ஓடி ஒளிந்த ராமன்
26. நகையே வேண்டாம் மச்சான்
27. மனம் மாறுமா ?
28. குப்பையே மாணிக்கம்
29. நமது தேசியக் கொடி
30. வானம்

## நூல்கள்—விலை இரண்டு அணா

1. மின்னலும் இடியும்
2. நீரில் மூழ்கினால்.........
3. முத்து ரத்தினம்
4. குடை சாய்ந்தது
5. ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்
6. பணம் வாங்காத வைத்தியர்

கிடைக்கும் இடம் :

**சென்னை அரசினர் அச்சகக் கிளை,**

(புத்தக விற்பனை நிலையம்)

166, மவுண்ட் ரோடு, சென்னை-2.